
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூன் 8, 2019

Weekly E-paper • JUNE 8, 2019

# மொழி அறிவும் மொழியால் பெறும் அறிவும்

சுப. வீரபாண்டியன்





## குருவும் சீடனும்

பொள்ளாச்சி மா.உமாபதி

## எடப்பாடியின் எட்டுவழி..?

தலையங்கம்



## உதவாதினி ஒரு தாமதம்

‘பைந்தமிழ்’ பாபு

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஜூன் 8, 2019 Weekly E-paper ● JUNE 8, 2019

# மொழி அறிவும் மொழியால் பெறும் அறிவும்

● சுப. வீரபாண்டியன்



இந்தியாவின் மொழிச்சிக்கல் மூன்று வகைப்பட்டது. ஒன்று ஆட்சி தொடர்பானது, இரண்டாவது கல்வி தொடர்பானது, மூன்றாவது இசை, வழிபாடு முதலியன தொடர்பானது.

இப்போது எழுந்திருப்பது கல்வி தொடர்பான மொழிச்சிக்கல். இதனை 1937ஆம் ஆண்டின் தொடர்ச்சி என்று சொல்லலாம். அப்போது தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த ராஜாஜி, கல்விக்கூடங்களில் தாய்மொழி, ஆங்கிலம் தவிர்த்து, இந்தியும் மூன்றாவது கட்டாயப் பாடம் என்னும் ஆணையை வெளியிட்டார். அதனை எதிர்த்து நாடெங்கும் கிளர்ச்சிகள் நடைபெற்றன.

1939ஆம் ஆண்டு, இந்தியாவெங்கும் காங்கிரஸ் கட்சி பதவி விலகுவது என்று முடிவெடுத்ததற்கு இணங்க, ராஜாஜியும் பதவி விலகினார். அதன்பின் 1940இல் ஆங்கிலேய அரசு அந்த ஆணையைத் திரும்பப் பெற்றுக்கொண்டது. எனினும், பள்ளிகளில், கட்டாயப்பாடமாக இல்லையென்றாலும், விருப்பப் பாடமாக இந்தி நீடித்தது. இந்தி வினாத்தாளையாவது அப்படியே திரும்ப விடைத்தாளில் எழுதிவிட்டுப் போகுமாறு அன்றைய மாணவர்கள் வலியுறுத்தப்பட்டனர்.

1967இல் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அறிஞர் அண்ணா, 23-1-1968 அன்று சட்டமன்றத்தைக் கல்வி தொடர்பான மொழிச்சிக்கல் குறித்துப் பேசுவதற்காக மட்டுமே கூட்டினார். அன்றுதான் மும்மொழிக் கொள்கை என்னும் கோட்பாடு முற்றிலுமாக அகற்றப்பட்டு, தமிழ்நாட்டு அரசுப் பள்ளிகளில் இனி இருமொழிகள் (தமிழ், ஆங்கிலம்) மட்டுமே கற்பிக்கப்படும் என்று திட்டவட்டமாக அண்ணா அறிவித்தார். இன்றூ வரை அந்நிலையே தொடர்கிறது. இப்போது புதிய கல்விக்கொள்கைக்கான பரிந்துரையில், இந்தியா முழுவதும் மும்மொழிக்கொள்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி, இந்தியா முழுமைக்கும்தானே இத்திட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சமாதானம் சொல்லப்படுகிறது. இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி கட்டாயப்பாடமாக இருக்குமென்றும், இந்தி பேசும் மாநிலங்களில் இந்தியாவின் மொழிகளில் ஏதேனும் ஒன்று மூன்றாவது மொழிப்பாடமாக இடம்பெறும் என்றும் கூறுகின்றனர்.

இந்தக் கூற்றிலேயே ஒரு சமத்துவமின்மை இருப்பதைக் காணமுடியும். இந்தியாவின் மொழிகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. ஆதலால், அண்டை மாநில மொழி ஒன்றை அல்லது இந்தியின் கிளை மொழி ஒன்றை அவர்கள் படித்துக் கொள்ளலாம். ஆனால் நாமோ, நமக்குத் தொடர்பும் பயனும் அற்ற இந்தி மொழியைத்தான் கட்டாயம் படித்தாக வேண்டும்.

தேவையையும், திறமையையும் ஒட்டி நாம் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம். அது அவரவர் விருப்பமும், உரிமையும் சார்ந்ததாகும். ஆனால் எந்தவொரு மொழியையும் படித்தே தீரவேண்டும் கட்டாயப்படுத்துவது ஆதிக்கப் போக்கின் அடையாளமே.

ஆதிக்கத்தை எதிர்த்து அன்றும் தமிழகம் களத்தில் நின்றது. இன்றும் களம் காண அணியமாய் உள்ளது. நாம் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் இல்லை. ஆனால் எல்லா விதமான ஆதிக்கத்தும் எதிரானவர்கள்.

மொழி அறிவு சிறந்தது என்பதை நாம் மறுக்கவில்லை. அதனினும், மொழியால் பெறும் அறிவே மிக மிகச்சிறந்தது என்பதை அரசும் ஆதிக்கவாதிகளும் உணர்ந்திட வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள தனியார் பள்ளிகளில் பணக்கார மாணவர்கள் இந்தியைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு உள்ளது. ஆனால் அரசுப்பள்ளிகளில் அந்த வாய்ப்பு ஏழை மாணவர்களுக்கு ஏன் மறுக்கப்பட வேண்டும் என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

அடிப்படைத் தேவைகளை நோக்கியே அரசு செயல்பட முடியும். அதனை மிஞ்சிய ஒவ்வொருவரின் தேவையையும், ஒட்டுமொத்த மக்களின் வரிப்பணத்தில் அரசு நிறைவேற்ற முடியாது. அப்படிப் பார்த்தால், உலகில் மிகுதியான மக்களால் பேசப்படும் பிரெஞ்சு, ஸ்பானிஷ், சீனம் ஆகிய மொழிகளையும் ஏழைப்பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கக் கூடாதா என்ற வாதமும் எழும்.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால் ஏழைப் பிள்ளக்களுக்கு இந்தி கற்றுக் கொடுப்பதோ, பன்மொழி அறிவை வளர்ப்பதோ இவர்களின் நோக்கம் இல்லை. இந்தியை, இந்தி வழி சமஸ்கிருதத்தைத் திணிப்பதும் அதன் மூலமாக பார்ப்பனிய வல்லாதிக்கதிற்கு வழிவிடுவதுமே மத்திய அரசின் நோக்கம்.

அந்த நோக்கதிற்கு மானமிகு தமிழர்களாகிய நாம் ஒருநாளும் மண்டியிட மாட்டோம். •

# குருவும் சீடனும்

● பொள்ளாச்சி மா.உமாபதி

**குரு:** *ஏ! சீடனே! மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசையை விட்டு ஒழி!*

**சீடன்:** *விட்டேன் குருவே! தங்கள் கட்டளையை ஏற்கிறேன். அது சரி குருவே! அவற்றை விட்டால் என்ன கிடைக்கும்?*

**குரு:** *சொர்க்கம் கிடைக்குமடா! சொர்க்கம் கிடைக்கும்.!!*

**சீடன் :** *சொர்க்கத்தில் என்ன இருக்கும் குருவே!*

**குரு :** *சொர்க்கத்தில் கற்பகத் தரு இருக்கும். அது தேவலோகத்து மரம். அதனிடம் எதைக் கேட்டாலும் கிடைக்கும். பொன்சுவர்களாலும், பொன்கூரைகளாலும் வேயப்பட்ட பொன்மாளிகைகள் இருக்கும். அத்துடன் ரதி, ரம்பை, மேனகை, ஊர்வசி ஆகிய தேவலோகத்து அப்சரஸ்கள் இருப்பார்கள். அனுபவிக்கலாமடா ... அனுபவிக்கலாம்.*

**சீடன் :** *ஏன் குருவே! கண்ணெதிரே , கையில் இருக்கிற மண்ணையும், பொன்னையும், பெண்ணையும் துறந்துவிட்டு, சொர்க்கத்துக்குப் போனாலும் அவைதானே கிடைக்கும். அதிலும் இங்கே எனக்கென இருக்கும் ஒரே அன்பு மனைவியைத் துறந்துவிட்டு அங்கே போய் எல்லோருக்கும் பொதுவான ரதி, ரம்பை, மேனகை, ஊர்வசிக்காக வரிசையில் நிற்பதா? இவ்வுலகில் இருப்பதைத் துறந்துவிட்டு, எங்கே இருக்கிறது என்று தெரியாத சொர்க்கத்தில் போய் மண்ணில் விட்டதை, விண்ணில் தேடுவது சரியாகத் தெரியவில்லை குருவே! எனக்கு இருப்பதே போதும்! இதுவே சொர்க்கம்.*

கற்பனையில் இருக்கும் சொர்க்கத்தைப் பற்றிய ஒரு கற்பனைக்கதை இது. இது நம் தேசியவாதிகளுக்கும் சரியாகப் பொருந்தும். நாம், நம் அன்னைத் தமிழ் மொழியுடன், உலக அறிவு பெற ஆங்கிலம் இவற்றோடு, எதற்கும் உதவாத இந்தியைப் படிக்க வேண்டுமாம். அப்படிப் படித்தால் வடநாட்டில் வேலை கிடைக்குமாம். அதனால் வளமான வாழ்வு கிடைக்குமாம். இல்லையென்றால் தாழ்ந்து போவோமாம், வீழ்ந்து போவோமாம்.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவன், படித்துப் பட்டம் பெற்று, வடக்கே வேலை கிடைக்காமல் தெற்கு நோக்கிப் படையெடுக்கிறான், சென்னைக்கும், பெங்களூருக்கும், ஐதராபாத்துக்கும், திருவனந்தபுரத்திற்கும் தினந்தோறும் வடக்கே இருந்து வரும் தொடர்வண்டிகளில் எல்லாம் ஆயிரக்கணக்கான வடநாட்டு இளைஞர்கள் வேலை தேடி வந்துகொண்டு இருக்கின்றனர். ஆனால், இவர்கள் இந்தியைப் படித்தால் வடநாட்டில் வேலை கிடைக்கும் என்கின்றனர். இங்கே வந்தவர்களுக்குப் படிப்புக்கேற்ற வேலை கிடைக்கவில்லை என்பதால், சப்பாத்திக்கடை போடுகிறான், சோன்பப்டி விற்கிறான், பான்பீடா கடை போடுகிறான், பானிபூரி விற்கிறான். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவனுக்கே அங்கு வேலை இல்லாத போது நமக்கு மட்டும் எப்படிக் கிடைக்கும்?




1965–ம் ஆண்டு இந்தி மொழிக்கு எதிராக மாணவர்கள், இளைஞர்கள் போராட்டம் நடத்திய காட்சி.

தமிழ்நாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் இருமொழிக் கொள்கைதான் என்று 1968ல் அறிவித்தார். அவர் குறிப்பிடுவார்; "இந்தியில் இரண்டு பெரிய நூல்கள் தான் உள்ளன; ஒன்று துளசிராமாயணம்; மற்றது ரயில்வே கைடு". இவற்றைத் தவிர வேறு எதுவும் இல்லை. இந்தி இந்தியாவின் 22 தேசிய மொழிகளில் ஒன்று. வேறெந்த இந்திய மொழிக்கும் இல்லாத சிறப்புச் சலுகைகளை இந்திக்கு மட்டும் கொடுப்பது பாரபட்சமானது, மாற்றாந்தாய் மனப்பான்மை கொண்டது.

அடுத்து இந்தி இந்தியாவில் பெரும் பான்மையான மக்கள் பேசும் மொழி என்கின்றனர். இது ஒரு மோசடி. தொடக்கத்தில் எல்லோரும் அப்படித்தான் நினைத்தோம். அப்போதுகூட அறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் கேட்டார், "எண்ணிக்கையில் அதிகம் என்று பார்த்தால் இந்தியாவின் தேசியப் பறவையாகக் காகம்தான் இருக்கவேண்டும். ஏன் மயிலை வைத்திருக்கிறீர்கள்? அதன் சிறப்பைக் கருதித்தானே! எண்ணிக்கைப் படி பார்த்தால் இந்தியாவின் தேசிய விலங்காக எலிதானே இருக்க முடியும்; ஏன் புலியை வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அப்போது, வடநாட்டில் பேசுவது எல்லாம் இந்தி என்று நினைத்தோம் இப்போதுதான் தெரிகிறது இந்தி என்பது ஒரே மொழியல்ல . பிகாரில், ஜார்க்கண்டில் பேசப்படும் மைதிலி, பீகார், கிழக்கு உத்திரப்பிரதேசத்தில் பேசப்படும் போஜ்புரி, ராஜஸ்த்தானில் பேசப்படும் ராஜஸ்தானி, மார்வாரி, உள்ளிட்ட சத்தீஸ்க்கரி, மகதி, ஹரியான்வி, கோர்த்தா, புண்டேலி,மால்வி, சாத்திரி, மேவாரி, வாதி, லம்பாடி, பஹாரி, ஹராட்டி, பாகேலி , கார்வாலி, நிமாடி, சுராஜ்புரி, சுரகுஜியா, பஞ்சாரி, ப்ராஜ்பாஷா, துண்டாரி, கோஜ்ரி, காங்கிலி போன்ற பல்வேறு மொழிகளைப் பேசுவோரையும் இந்தி பேசுவோராகக் காட்டி மோசடி செய்துதான் இந்தி பேசுவோர் எண்ணிக்கையைக் கூட்டிக்காட்டினர். தொடக்கத்தில் 52% பேர் இந்தி பேசுவதாகக் குறிப்பிட்டனர். இப்போது அது 26% மட்டுமே உள்ளது. எனவே அந்தச் சாயமும் வெளுத்துப்போனது.

இந்தியைப் படிப்பதால் நமது பிள்ளைகளின் வாழ்வு பாதிக்கப்படுகிறதா என்றால் இல்லை. வளங்கள் குறைகிறதா என்றாலும் இல்லை. ஒரு மொழியின் சுமைகுறைந்து ஆங்கிலத்தில் கவனம் செலுத்திய நமது பிள்ளைகள் இன்று கணினி வல்லுனர்களாக உலகெங்கும் பரவிக் கிடக்கின்றனர். இந்தியர்களை நாட்டைவிட்டு வெளியேற்றினால் எனது தலைமை அலுவலகத்தைத் தமிழகத்துக்கு மாற்றுவேன் என்று மைக்ரோசாப்ட் தலைவர் பில்கேட்ஸ் அவர்கள் குறிப்பிடும் அளவுக்குத் தமிழர்கள் இடம் பெற்றுள்ளனர். நமது தமிழ்நாட்டைச் சார்ந்த சுந்தர்ப்பிச்சை அடைந்துள்ள உயரம் மற்றுமொரு எடுத்துக்காட்டு. இந்தியாவின் பெரிய பதவிகளான குடியரசுத்தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, விண்வெளி விஞ்ஞானி ஆகிய பொறுப்புகளுக்கு வந்த குடியரசுத் தலைவர் அப்துல்கலாமும், நீதியரசர் சதாசிவமும், சந்திராயன் மயில்சாமி அண்ணாத்துரையும் இந்தியைப் படித்து முன்னேறியவர்கள் இல்லை. இந்தி படிக்காத தால் அவர்களின் முன்னேற்றத்தை யாரும் தடுக்க முடியவில்லை. அவர்களின் முன்னேற்றத்திற்கு இந்தி எந்த விதத்திலும் பயன்படவும் இல்லை.

1938ல் தந்தை பெரியார், தமிழ்க்கடல் மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியிடுபவர்
கோ.தினகரன்

இணையதளம்
www.keetru.com
www.peravai.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

## திண்டுக்கல் ஆலோசனைக் கூட்டம்




திண்டுக்கல் மாவட்டப் பேரவை அமைப்புக் கூட்டத்தில், 9-6-2019 அன்று புதுச்சேரியில் நடைபெற உள்ள பொதுக்குழுவிற்குத் திண்டுக்கல் மாவட்டத் தோழர்கள் கலந்து கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. திண்டுக்கல் மாநகரச் செயலாளராகத் தோழர் பார்த்திபன், திண்டுக்கல் மாநகரத் துணைத் தலைவராகத் தோழர் முருகன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

## நூல் அறிமுகக் கூட்டம்




25-5-2019 அன்று திண்டுக்கல்லில் நூல் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சுப.வீரபாண்டியன், மா.உமாபதி, ஆ.சிங்காராயர், புலேந்திரன், வேடச்சந்தூர் ரவி, இனியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## .. முன்பக்கத் தொடர்ச்சி

பாரதியார் போன்றோரை முன்னிறுத்தி, அறிஞர் அண்ணா, பட்டுக்கோட்டை அழகிரி போன்றோரின் துணையோடு கட்டாய இந்தியை விரட்டினர். 1948 இல் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா அவர்களை இந்தி எதிர்ப்புப் போராளியாக்கி வென்றார். 1950களில் திராவிடர் கழகத்திலிருந்து தி.மு. கழகம் பிரிந்தாலும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் செயல்பட்டு இந்தியை விரட்டினர். 1965 மொழிப்போரில் கீழப்பழவூர் சின்னச்சாமி, கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், மாயவரம் சாரங்கபாணி, ஆசிரியர் வீரப்பன், கீரனூர் முத்து, சத்தியமங்கலம் முத்து, விராலிமலை சண்முகம், தொண்டாமுத்தூர் தண்டபாணி, போன்றோர் இந்தியை எதிர்த்து தங்கள் இன்னுயிரை நன்கொடையாக அளித்தனர். மாணவன் ராசேந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் ராணுவம் மற்றும் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகினர். அதன் பின் அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றதும் இந்தியை நீக்கிவிட்டு இருமொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தினார். 1986இல் மீண்டும் இந்தித் திணிப்பு தலைதூக்கியதும் சட்டத்தை எரித்துக் கலைஞர் சிறைப்பட்டார். பேராசிரியர் உள்ளிட்ட 10சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியிழந்தனர்.

இவ்வளவு நீண்ட நெடிய வரலாறுகொண்ட இந்தி திணிப்பு எதிர்ப்பு என்பது தமிழ் நாட்டில் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டுதான் இருக்கிறது. அதனை மீண்டும் தீண்டிப்பார்ப்பது ஆபத்தானது, தூங்கும் புலியை இடறிப்பார்க்கும் தன்மை கொண்டது. இருப்பதைக் காத்துக்கொள்ளாமல் சீண்டிப் பார்த்தால் தமிழ் நாட்டில் மட்டுமல்ல தென்னகத்தின் மற்ற மாநிலங்களிலும் இந்தி எதிர்ப்பு போர் வெடிக்கும். இந்தி எழுத்தைப் பிறகு தமிழ்நாட்டு தேடிப் பார்த்தாலும் கிடைக்காத நிலை ஏற்படும். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. அவ்வளவு தான் சொல்ல முடியும்.

•

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## எடப்பாடியின் எட்டுவழி..?

அண்மையில் பிரதமர் மோடியின் கொத்தடிமையாகச் செயல்படும் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, சேலம் எட்டுவழிச்சாலை நிறைவேறியே தீரும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்.

பாஜகவுடன் 'மெகா' கூட்டணி வைத்திருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் எடப்பாடிக்குத் தெரியாது, அவரை ஒரு கிள்ளுக் கீரையாகத்தான் பாஜக வைத்திருக்கிறது என்று.

அதனால்தான் பாஜக வின் குரலை ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறார் அவர் இங்கே.

தமிழகத்தில் தொழில், வர்த்தகம் பெருகிக்கொண்டிருக்கிறது என்றும், திருப்பூர், கோவை, ஈரோடு ஆகிய மாவட்டங்களில், இருந்து போக்குவரத்து, சென்னையை நோக்கி அதிகமாக இருப்பதால், எட்டுவழிச்சாலை அவசியம் என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

இதுவரையும் இதே மாவட்டங்களில் இருந்து தொழில், வர்த்தகம் இவைகளுக்கான போக்குவரத்தில் எந்த இடையூறும் இல்லாமல் இருந்து வந்துள்ளது என்பதை ஏன் எடப்பாடி உணரவில்லை.

இப்போது போக்குவரத்து வசதிக்காக என்று சொல்லிக்கொண்டு பல ஆயிரம் மரங்களை அழித்து, ஏழை விவசாயிகளின் நிலங்களைக் கையகப்படுத்தி இந்த எட்டுவழிச்சாலை அமைப்பதின் நோக்கம் மக்களுக்குப் புரிகிறது.

கார்பரேட்டுகளுக்காக, அவர்களின் நலன்களுக்காக, சேலம் இரும்பாலையை வடவர்களுக்குத் தாரை வார்க்கவும், சேலம் அதைச் சுற்றியுள்ளப் பகுதிகளில் இருக்கும் தாது வளங்களை, வடநாட்டுக் கார்பரேட்டுகள் கொண்டு போகும் வசதிக்காகத்தான் இந்த எட்டுவழிச்சாலை அமைக்கப்படுகிறது என்றும் மக்கள் பேசத் தொடங்கிவிட்டார்கள்.

இது எதிர்காலத்தமிழகத்துக்கு நன்மை விளைவிக்காது, மாறாக தீமையில்தான் போய் முடியும்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை, கூடங்குளம் அணு உலை மற்றும் அதன் கழிவு, நியூட்ரினோ, ஹைட்ரோ கார்பன் திட்டம் போன்றவைகளால் தமிழகத்தின் சுற்றுச்சூழல், மக்களின் வாழ்வாதாரம் பாதித்துக்கொண்டிருக்கிறது.

இதைப்பற்றி எல்லாம் கவலைப்படாத எடப்பாடி எட்டுவழிச்சாலை கொண்டுவர மத்திய அரசுக்குத் துணையாக இருப்பேன் என்று சொல்லி இருப்பது மக்கள் விரோதச் செயல், கண்டனத்தும் உரியது.

# உதவாதினி ஒரு தாமதம்

● பைந்தமிழ் பாபு

தற்போது நடைமுறையில் உள்ள தேசிய கல்விக் கொள்கையானது, 1986 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையிலான மத்திய அரசால் வெளியிடப்பட்டது.

இக்கல்விக் கொள்கை யானது மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் (DPEP), அனைவருக்கும் கல்வி (SSA), கல்விக்கான உரிமை (RTE), தேசியப் பெண்களுக்கான தொடக்கக் கல்வித் திட்டம் (NPEGEL), அனைவருக்கும் இடைநிலைக் கல்வி (RMSA), மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த இடைநிலைக் கல்வி (IEDSS IEDSS),முதியோா் கல்வி, அனைவருக்கும் மேனிலைக் கல்வி (RUSA) குறிப்பாகப் பெண்கள், பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முக்கியத்துவம் அளித்தல் உள்ளிட்ட கல்வி வளர்ச்சித் திட்டங்களை உள்ளடக்கி நடைமுறைப் படுத்தப்பட்டது.

அதன் பின்னர் 1992 ஆம் ஆண்டு தாராளமய கொள்கைக் கேற்ப சில மாற்றங்கள் செய்யப்பட்டன.

ஆனால் தற்போது பதவியேற்றுள்ள மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசு, சமூக நீதியையும் மாநில சுயாட்சியையும் முற்றிலுமாக புறந்தள்ளி தம்முடைய இந்துத்துவா கொள்கைக்கு ஏற்ப ஒரு கல்விக் கொள்கையை உருவாக்க முயற்சித்து வருகிறது.

கடந்த முறை கார்ப்பரேட்டுகளின் விருப்பத்திற்கேற்ற கல்வித் திட்டத்தை வடிவமைக்க ஸ்மிருதி இரானியும் பிரகாஷ் ஜவடேகரும் தேவைப்பட்டார்கள். இம்முறை சங்பரிவாரங்கள் விரும்பும் கல்வித் திட்டத்தை செயல்படுத்தவே மனித வளமேம்பாட்டுத் துறையின் அமைச்சராக்கப்பட்டுள்ளார் ரமேஷ் பொக்ரியால்.



மாணவப் பருவத்திலிருந்தே ஆர்எஸ்எஸ் ஆதரவாளரான ரமேஷ் பொக்ரியால், ஆர்.எஸ்.எஸ். இயக்கம் நடத்தி வரும் சரஸ்வதி சிசு மந்திர் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றியவர். மேலும் 1991 முதல் 2000 வரை உத்திரப்பிரதேச ஏம்எல்ஏ வாகவும், 1997 ஆம் ஆண்டு முதல் கல்யாண் சிங் அமைச்சரவையிலும் அதன் பின்னர் உத்தரகாண்ட் உருவாக்கப்பட்ட பின்னர் 12 துறைகளின் அமைச்சராகவும் பணியாற்றியவர். 2009 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை உத்தரகாண்ட் முதலமைச்சராகவும் இருந்தவர். இவரின் படிப்படியான அரசியல் வளர்ச்சிக்கு காரணமே ஆர்எஸ்எஸ் சொல்வதை இவர் அப்படியே செய்து முடிப்பவர் என்பதால் தான்.

இந்துத்துவ பின்புலம் கொண்ட ஹரித்வார் தொகுதியில் 2014 ஆம் ஆண்டு முதல் எம்பியாக உள்ள இவரைத்தான் மனித வள மேம்பாட்டுத் துறைக்கு அமைச்சராக்கியுள்ளது ஆர்எஸ்எஸ்.

அமைச்சராக பொறுப்பேற்ற பின் செய்தியாளர்களைச் சந்தித்த பொக்ரியால் "விரைவில் நாடு முழுவதும் கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத ஒரு புதிய கல்விக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும் " என்றார்.

அதற்கு மறுநாளே வெளியிடப்பட்ட 477 பக்கங்கள் கொண்ட புதிய கல்விக் கொள்கைக்கான வரைவு ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தை உள்ளடக்கியது என்பதால் தானோ என்னவோ கஸ்தூரிரங்கன் தலைமையிலான குழு தனது பரிந்துரையை மனிதவள மேம்பாட்டுத்துறையிடம் சமர்ப்பிக்கும் முன்னரே ஆர்எஸ்எஸ் தலைவரிடம் கொடுத்துள்ளது.

இதில் தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள பேராபத்துகள் சில :

1.இந்தி பேசாத மாநிலங்களில், இந்தியை பயிற்றுவிக்க வேண்டும் இந்நடைமுறையை ஆறாம் வகுப்பில் இருந்து தொடங்க வேண்டும். பேரறிஞர் அண்ணாவின் இரு மொழிக் கொள்கைக்கு மாறான மும்மொழி திட்டத்தின் மூலம் இந்தியைத் திணிப்பது மட்டுமின்றி அதன் வேரான சமஸ்கிருதத்தையும் ஏற்க வைப்பது

2. பல்கலை மானியக் குழு போன்ற கல்வித் துறை சார்ந்த உயர் அமைப்புகளைக் கலைத்துவிட்டு, தேசிய கல்வி ஆணையத்தை அமைக்க வேண்டும்.

தேசியக் கல்வி ஆணையத்தை மத்திய அரசின் கட்டுப் பாட்டிற்குள் வைத்துத் தமிழக கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையிலும் ஆசிரியர் பணி நியமனத்திலும் வடவர்களை உட்புகுத்துவது

3. ஆசிரியர்களுக்கு, மூன்று ஆண்டுக்கு ஒருமுறை பயிற்சியும், ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை தேர்வும் வைக்க வேண்டும். அதன்படியே, ஊதியம் மற்றும் பதவி உயர்வு வழங்க வேண்டும்.

தகுதித்தேர்வு என்ற பெயரில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மை வகுப்பினரை ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்விலிருந்து விலக்கி வைத்து ஒரு சாராரை உயர் பதவியில் அமர்த்துவது.

4. கல்வி நிலையங்களில் தமது சமயத்தைக் கற்க மற்றும் பின்பற்ற மாணவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும்.

இதன் மூலம் சித்தாந்த ரீதியாக பாஜகவை வளர்க்க யோகா வகுப்புகள் என்ற பெயரில் ஆர்எஸ்எஸ்சின் சாகா வகுப்புகளைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தொடங்குவது, அதன் மூலம் மாணவர்களையும் இளைஞர்களையும் இந்துத்துவ சித்தாந்தத்திற்கு மடை மாற்றுவது.

இவை மட்டுமன்றி பெரும்பாலான செயல் திட்டங்களும் பாசிசத்தை மண்ணிலே விதைக்கிற முயற்சியாகவே தெரிகிறது. இவர்களின் திட்டம் பாரதியின் முண்டாசுக்கு மட்டுமல்ல கரும்பலகைக்கும் காவியடித்து முற்றிலுமாக கல்விக் கூடங்களைக் காவிக் கூடாரங்களாக மாற்றுவதே.

ஏற்கனவே ஹைட்ரோ கார்பன் திட்டம், எட்டு வழிச்சாலை என நம் இயற்கை வளத்தை வேட்டையாடுவது மட்டுமின்றி இப்போது தகுதித் தேர்வு, அரசுப் பணிகளில் வெளி மாநிலத்தவர், புதிய கல்விக் கொள்கை என நம் மனித வளத்தையும் அழிக்கத் துடிக்கிறது ஆர்எஸ்எஸ் கும்பல் .

திராவிட இயக்கங்கள் போராடிப் பெற்றுத் தந்த கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசியல் அங்கீகாரம் இவற்றை முழுவதுமாக விழுங்க வரும் ஆரிய நச்சுப் பாம்பை அடித்து விரட்ட பெரியார் தடியைக் கையிலெடுப்போம்.

"உதவாதினி ஒரு தாமதம் உடனே விழி தமிழா ". ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.